அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 35/92(11)

எனது இல. 11/2/9/361/8(எச்) 1/1
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
1995 யூன் மாதம் 21 ஆம் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

அரசாங்க உத்தியோகத்தர்களின் ஒழுக்காற்று விசாரணை
களைத் துரிதப்படுத்தல். தாபன விதிக்கோவைக்குத் திருத்தங்கள்
அத்தியாயம் - XLVIII

---

தாபன விதிக்கோவையின் பகுதி 11 அத்தியாயம் XLVIII ஐ திருத்தி வெளியிடப்பட்ட 1992.12.21 ஆந் தேதிய 35/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 04ஆம் பிரிவின் மீதும், 1994.11.28 ஆம் தேதிய 35/92(1) இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீதும் தங்களின் அவதானம் ஈர்க்கப்படுகிறது.

2. 1990.08.17 ஆந் தேதிய 35/90 இலக்கம் கொண்டதும் 1991.03.18 ஆந் தேதிய 35/90(1) ஆம் இலக்கம் கொண்டதுமான அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி விசாரணை அலுவலர் சபையின் உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக இனி வருங்காலத்தில் இச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி உத்தியோகத்தர்களை ஒழுக்காற்று விசாரணைகளுக்காக நியமிக்க வேண்டும்.

3. இச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள சட்டத்தரணி ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் முறைப்பாட்டுத் தரப்பு அலுவலர்களாகவோ எதிர்த்தரப்பு அலுவலர்களாகவோ செயற்படுவதில் தடைகள் ஏற்படாது.

4. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 35/92 இன் 05 ஆம் பிரிவின்படி இந் நியமனங்கள் செய்யப்பட வேண்டும்.

5. அரச சேவையில் ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் சட்டத்தரணிகளாகச் செயற்பட்டு அனுபவம் வாய்ந்தவர்களுமான சட்டத்தரணிகளின் பெயர் அட்டவணையொன்று இத்துடன் உள்ள பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 35/90இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்காற்று விசாரணை அலுவலர்கள் தற்போது ஒழுக்காற்று விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டிருப்பின் அவ்விசாரணை முடியும் வரை நடாத்திச் செல்வதற்கு இச் சுற்றறிக்கை தடையாக இராது.

ஒப்பம்: ஆர்.எஸ்.ஜயரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.